JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 471/2025 | Crime No. | 25/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | PW.2– சந்திரசேகர் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 25.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது கோபியில் வசித்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 20.01.2025 தேதியன்று முதல் நிலை காவலர் சந்திரசேகரன் மற்றும் இரண்டாம் நிலை காவலர் தினேஷ்குமார் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு காவல் நிலைய சரகத்தில் மதுவிலக்கு தொடர்பான குற்றங்களை தடுக்கும் பொருட்டு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபொழுது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காமநாயக்கன்பாளையம் ரோட்டில் உள்ள முத்தாலம்மன் கோவில் அருகில் உள்ள முட்புதரில் கண்காணித்தபோது அங்கு சந்தேகிக்கும்படி கையில் பையுடன் நின்று கொண்டிருந்த எதிரி எங்களை பார்த்தவுடன் ஓட முற்பட்டவரை பிடித்து அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபொழுது சுமார் 180 ML அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள் 10 மற்றும் மது விற்ற பணம் ரூ.1500/– வைத்திருந்தார். அவரை விசாரித்தபோது முதலில் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தவர், பின்னர் தனது பெயர் ராஜு (எ) M.G.R என்றும் தனது முகவரியையும் கூறியவர், அரசு மதுபானங்களை வாங்கி தனது சுய லாபம் கருதி அதிக விலைக்கு விற்று வருவதாகவும் கூறி அரசு அனுமதியின்றி மேற்படி மது பாட்டில்களை விற்பனை செய்த குற்றத்தை குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் காலை 10:30 மணிக்கு கைது செய்தும், பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னுடன் வந்த மேற்படி காவலர்கள் இருவர் முன்னிலையில் காலை 10:45 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த 10 மது பாட்டில்கள் மற்றும் பணம் ரூ.1500/– ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி காவலர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். தற்போது நீதிமன்றத்தில் உள்ள பிராந்தி

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.25 18:55:48 +0530

பாட்டில்களை தான் நான் அன்று கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றினேன். **180 ML அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள் 10 அ.சா.பொ.1 ஆகவும், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1500/- (3 X 500 ரூபாய் நோட்டுகள்) அதற்கான புகைப்படம் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.25/ 2025, சட்ட பிரிவுகள் 4(1)(C) OF TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க நிலையைப் பிணையில் விடுவித்தேன். கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் என்னுடன் வந்த முதல் நிலைக் காவலர் மற்றும் இரண்டாம் நிலை காவலர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே 20.01.2025-ம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) OF TNP ACT கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தை 1 மாதம் கழித்து தான் இந்த நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால், சரிதான். இந்த வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால், சரிதான். பொது ஜன சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்கு போடப்பட்ட வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.25 18:55:58 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani